**CC** 82/2023

16.05.2024

**ம.சா.2 விவேக்கண்ணன்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) 1) எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் கேட்டுக்கொண்டதால் சாட்சி சொல்லவந்திருக்கிறேன் என்றால் சரிதான். புகார்தாரரை எப்படி தெரியும் என்றால் புகார்தாரர் எனது நண்பர். நான் எனது முதல் விசாரணையில் எதிரி புகார்தாரரிடம் பணம் வாங்கியதாகவும், அது தொடர்பாக ஆவணங்கள் எழுதிக்கொடுத்ததாக சொல்லியிருக்கும் விபரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். புகார்தாரர் கேட்டுக்கொண்டதற்காக புகார்தாரரின் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றும், மற்றபடி மேற்படி ஆவணங்கள் குறித்து எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. புகார்தாரர் எனது நண்பர் என்பதால் புகார்தாரர் கேட்டுக்கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.